செய்தி வெளியீடு எண்: 843 நாள்: 27.11.2019

<u>செய்தி வெளியீடு</u>

## அகரமுதலி இயக்ககத்தில் தமிழ்க் கலைக்கழகத்தின் 50–ஆவது கூட்டம்!

## பலதுறை அறிஞர்கள் பங்கேற்பு!

இன்றைய அறிவியல் தொழில்நுட்பக் காலத்தில் நாள்தோறும் புதுப்புதுத் துறைகள் உருவாகிவருவதால், அத்துறைகள் சார்ந்த சொற்களும் நாள்தோறும் புதுவரவாகப் பெருகி வருகின்றன. அவற்றிற்கெல்லாம் உடனுக்குடன் தக்க வகையில் தமிழ்க் கலைச் சொல்லாக்கம் செய்து புழக்கத்திற்குக் கொண்டுவந்தால்தான் பிறமொழிக் கலப்பின்றி நம்மொழியைக் காக்க முடியும்; மேலும் நம்மொழியின் சொல்வளத்தையும் பெருக்க முடியும்.

இந்த உயரிய நோக்கத்திற்காகச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் 21.11.2016–இல் **“தமிழ்க் கலைக்கழகம்”** என்ற அமைப்பைத் தமிழ்நாடு அரசு தோற்றுவித்தது. இக்கலைக்கழகத்தில், அலுவல்சார் உறுப்பினர்கள் 4 பேர், அலுவல்சாரா உறுப்பினர்கள் 5 பேர் மற்றும் மதிப்புறு உறுப்பினர்கள் 30 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

31.12.2018 வரை மாதம் ஒரு கூட்டம் என்ற வகையில் 28 கூட்டங்கள் நடைபெற்றன. இந்நிலையில், மொழிவளர்ச்சிக்கான ஆக்கப் பணியாக விளங்கிடும் தமிழ்க் கலைக்கழகத்தின் செயல்பாட்டுத் தேவையை உணர்ந்த தமிழக அரசு 2018–2019–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், ‘‘செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் செயல்பட்டு வரும் தமிழ்க்கலைக்கழகமானது மாதமொன்றுக்கு ஆயிரம் தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து வெளியிடும் வகையில், தொடர் செலவினமாக ஆண்டுக்கு ஒரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் (ரூ. 1,56,000/–) செலவில் புதுப்பிக்கப்படும்’’ என்று அறிவித்து அரசாணை வெளியிட்டது. அவ்வரசாணைக்கிணங்க 01.01.2019 முதல் மாதம் இரு முறை கலைக்கழகக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இக்கூட்டங்களில், அகரமுதலிப் பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர் மற்றும் தொகுப்பாளர்கள் ஆகியோர் மக்களின் நடைமுறை வாழ்க்கையிலும், பேச்சு வழக்கிலும், ஊடகத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வழங்கப்படும் பிறமொழிக் கலைச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்குத் தாங்களே வடிவமைக்கும் தமிழ்க் கலைச்சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

இச்சொற்களை அகராதியியல் அறிஞர்கள், மொழியியல் வல்லுநர்கள், தமிழறிஞர்கள், கணினி வல்லுநர்கள், இதழியலாளர்கள், மருத்துவத்துறையினர் உள்ளிட்ட பலதுறை அறிஞர்களைக் கொண்ட தமிழ்க் கலைக்கழகத்தின் வல்லுநர் குழு ஆராய்ந்து சீர் செய்து ஒப்புதலளித்த பின், அரசாணை பெறப்பட்டு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் **திரு. க. பாண்டியராசன்** அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, **“sorkuvai.com”** என்ற வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வழுங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **27.11.2019 வரை நிகழ்ந்த தமிழ்க் கலைக்கழகக் கூட்டங்களின் எண்ணிக்கை (1–28 மாதமொரு கூட்டம், 29–50 மாதம் இரு கூட்டம்)** | **–** | **50** |
| தமிழ்க் கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள சொற்கள் | **–** | **27,763** |
| தமிழ்க் கலைக்கழகத்தால் ஏற்பளிக்கப்பட்டுள்ள சொற்கள் | **–** | **14,370** |
| அரசாணை வாயிலாக வெளியிடப்பட்டுள்ள சொற்கள் | **–** | **3000** |
| அரசாணை வெளியிடப்பெற அனுப்பப்பட்டுள்ள மொத்த சொற்கள் | **–** | **9,000** |
| அரசாணை பெற கருத்துரு அனுப்ப வேண்டிய மொத்தச் சொற்கள் | **–** | **2,200** |

இந்நிலையில், **27.11.2019–**ஆம் நாள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் ‘தமிழ்க் கலைக்கழகத்தின் **50–**ஆவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், **583** சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு **310** சொற்களுக்குக் கலைக்கழக வல்லுநர் குழு ஏற்பளித்துள்ளது.

இக்கூட்டத்தில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் திரு. தங்க. காமராசு, மொழிபெயர்ப்பு அறிஞர் முனைவர் கு. பாலசுப்பிரமணியன், சென்னை, கல்லூரிக் கல்வி இயக்கக மேனாள் உதவி இயக்குநர் திரு. அ. மதிவாணன், புலவர் வெற்றியழகனார், ‘அறிவியல் ஒளி’ மாத இதழின் ஆசிரியர் திரு. நா.சு. சிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், திரைப்பட இயக்குநர் திரு. பாலுமணிவண்ணன், முகப்பேர் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. த. விஜயகுமார், தமிழ்க் கலைக்கழக மதிப்புறு உறுப்பினர்களுள் ஒருவராகிய, கனடா நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் செ. இரா. செல்வக்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர்.

அகரமுதலி இயக்ககப் பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர் மற்றும் தொகுப்பாளர்கள் மற்றும் சென்னை, செல்லம்மாள் மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையின் முதுகலை மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டு சொல்லாக்கப் பணியை மேற்கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**